புதுச்சேரி, காரைக்கால் அரசுப் பள்ளிகளில்

1 முதல் 12-ம் வகுப்பு வரை சிபிஎஸ்இ பாடத்திட்டம் அமல்

● மார்ச் 25-ல் மாணவர் சேர்க்கை - ஏப்ரல் 1-ல் புதிய கல்வியாண்டு தொடக்கம்

● புதுச்சேரி

புதுச்சேரி, காரைக்காலில் 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அனைத்து வகுப்புகளிலும் வரும் கல்வியாண்டில் இருந்து சிபிஎஸ்இ பாடத்திட்டம் அமலாவதால், மார்ச் 25-ம் தேதி அரசு பள்ளி மாணவர் சேர்க்கை தொடங்குகிறது. ஏப்ரல் 1-ம் தேதி அடுத்த கல்வியாண்டுக்கான வகுப்புகள் தொடங்குகின்றன.

புதுச்சேரியில் மொத்தம் நான்கு பிராந்தியங்கள் உள்ளன. புதுவைக்கு தனி கல்வி வாரியம் இல்லாததால் புதுவை, காரைக்கால் பிராந்தியங்களில் தமிழக பாடத் திட்டமும், ஏனாமில் ஆந்திர மாநில பாடத் திட்டமும், மாஹேயில் கேரள பாடத்திட்டமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

2011-ல் என்.ஆர்.காங், அரசு, அரசுப் பள்ளிகளில் சிபிஎஸ்இ பாடத் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டது. அதன் படி, 2014-15-ம் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பில் சிபிஎஸ்இ பாடத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு வகுப்பாக சிபிஎஸ்இ பாடத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வந்தது. இது காங்கிரஸ் ஆட்சியிலும் தொடர்ந்தது. இவ்வாறாக கடந்த 2018-19 கல்வி ஆண்டில் 5-ம் வகுப்பு வரையில் சிபிஎஸ்இ பாடத்

திட்டம் அமல்படுத்தப்பட்டது.

6-ம் வகுப்பில் இருந்து சிபிஎஸ்இ பாடத் திட்டம் விரிவாக்கப்படவில்லை.

இதற்கிடையே, 2021-ல் புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி அரசு ஆட்சியமைத்தது. இதைத் தொடர்ந்து சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை 12-ம் வகுப்பு வரைக்கும் முழுமையாக கொண்டு வர முடிவெடுக்கப்பட்டது.

புதிய கல்விக்கொள்கையை அமலாக்கவே சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக நடப்பு கல்வியாண்டில் (2023-24) 1 முதல் 9 மற்றும் 11-ம் வகுப்புகளில் சிபிஎஸ்இ பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன்படி 127 அரசுப் பள்ளிகள் சிபிஎஸ்இ பாடத்திட்டத்துக்கு மாறின. 10, 12-ம் வகுப்புகள் மட்டும் புதுச்சேரி, காரைக்காலில் தமிழக அரசு பாடத்திட்டத்தில் இருந்தன.

இந்தச் சூழலில், வரும் கல்வியாண்டு (2024-25) 1 முதல் 12-ம் வகுப்புகள் வரை முற்றிலும் அனைத்து வகுப்புகளும் சிபிஎஸ்இக்கு மாறவுள்ளன.

இதுதொடர்பாக புதுச்சேரி பள்ளி கல்வித்துறை இயக்குநர் பிரியதர்ஷினி வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

வரும் கல்வி ஆண்டான 2024- 25 முதல், அனைத்து அரசு பள்ளிகளிலும் 1 முதல் 12-ம் வகுப்பு வரையில் உள்ள அனைத்து வகுப்புகளிலும் சிபிஎஸ்இ பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதற்கான கல்வியாண்டு நாட்காட்டி, அரசாணையை கல்வியமைச்சர் நமச்சிவாயம் முன்னரே வெளியிட்டுள்ளார்.

இதன்படி, வரும் கல்வியாண்டு முதல் சிபிஎஸ்இ வாரியத்தின் விதிமுறைகளின் படி பள்ளிகள் ஏப்ரல் 1-ம் தேதி தொடங்கப்பட்டு 2025 மார்ச் இறுதி வரை வகுப்புகள் நடைபெறும். தொடர்ந்து மாணவர்களுக்கு மார்ச் 24 முதல் 31 வரையிலும் மற்றும் மே 1 முதல் 31 ம் தேதி வரையிலும் கோடை விடுமுறை விடப்பட்டு, ஜுன் 3 தேதி முதல் பள்ளிகள் தொடர்ந்து நடைபெறும்.

2024-25 -ம் கல்வியாண்டுக்கான அரசு பள்ளி மாணவர் சேர்க்கை 2024 மார்ச் 25-ல் இருந்து நடைபெற உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, காரைக்கால் போலவே மற்ற இரு பிராந்தியங்களான மாஹே, ஏனாம் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளிலும் இதே போல் முழுமையான சிபிஎஸ்இ பாடத்திட்டம் வரும் கல்வியாண்டில் நடைமுறைக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சாலையோர வாகன வியாபாரிகள் விதி மீறினால்..

● புதுச்சேரி

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சமீபகாலமாக வாகனம் மூலம் சாலையோர வியாபாரம் பெருகியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. பல்வேறு புகார்களை தொடர்ந்து வாகனங்களில் நடைபெறும் வியாபாரத்தை ஒழுங்குபடுத்த அரசு துறைகளின் கூட்டுக்குழு அமைத்து கண் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் அபராதம், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பொதுசுகாதாரத்துறை

சு.து.ந.க.எண்.82/457/2024 **பொதுசுகாதாரத்துறை - மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள். 15.03.2024

கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர், அவர்களால் கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறைக்கு தேவையான 136 கணினி பதிவாளர்களை வெளி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அளிக்க கோருதல்.

பணியின் மதிப்பு தொகை ரூ. 3,84,93,984/- | **ஒப்ப முன்வைப்புத் தொகை ரூ. 3,84,940/-**

நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் **17.04.2024** அன்று **பிற்பகல் 3.00மணி** வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **18.04.2024** அன்று பிற்பகல் **3.30 மணி** வரை

விவரங்கள் **www.tntenders.gov.in** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு தொலைபேசி எண் 044 - 25619330

செ.ம.தொ.இ / 1701 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மாநகர நல அலுவலர்**

திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

ந.க.எண்.752/2022 நாள். 12.03.2024

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (Two Cover Sysstem)

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2023–2024ம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள 25.03.2024 திங்கட்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி வரை கீழ்காணும் இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். பணிக்கான முன் வைப்புத் தொகையினை பணி மதிப்பீட்டுத் தொகைமில் 1 சதவீதம் இணையதளம் வழியாக செலுத்தப்பட வேண்டும்.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும். பணி சம்மந்தப்பட்ட ஒப்பந்தப்படிவங்களை 25.03.2024 திங்கட்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி வரை **www.tntenders.gov.in** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணி சம்மந்தமான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

வ. எண்.	பணியின் விவரம்	மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்
1	2023–2024ம் ஆண்டிற்கு பேரூராட்சியில் தேங்கியுள்ள கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் பணிகள் (Biomining)	85.11

செ.ம.தொ.இ/1656/ஒப்பந்தப்புள்ளி/2024

செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்

↑ விழுப்புரம் அருகே வேலியம்பாக்கம் கிராமத்தில் புதிய ரேஷன் கடை கட்டிடத்தை எம்எல்ஏக்கள் லட்சுமணன், புகழேந்தி ஆகியோர் திறந்து வைத்து, ரேஷன் பொருட்களை வழங்கினர்.

புதிய ரேஷன் கடை கட்டிடங்கள் திறப்பு

● விழுப்புரம்

விழுப்புரம் அருகே வேலியம்பாக்கம் கிராமத்தில், விழுப்புரம் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை கட்டிடத்தை எம்எல்ஏக்கள் விழுப்புரம் லட்சுமணன், விக்கிரவாண்டி புகழேந்தி ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினர்.

தொடர்ந்து தளவானூர், திருப்பாச்சனூர் கிராமங்களில் புதிய ரேஷன் கடை கட்டிடங்களை எம்எல்ஏ லட்சுமணன் திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

லீக் விளையாட்டு போட்டிகளில்

ஜெயப்பிரியா வித்யாலயா மாணவர்கள் சிறப்பிடம்

● விருத்தாசலம்

திருப்பயர் -ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் பங்கு பெற்ற லீக் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

'ஸ்போட்டிஃபிட்ஸஜன்' என்ற விளையாட்டு அமைப்பு, திருப்பயர் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இளம் வயதிலேயே, விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கில், கால்பந்து மற்றும் கோ-கோ விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது.

இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக் குழுமங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் சி.ஆர். ஜெய்சங்கர், மாணவர்களை ஊக்குவித்து,

➡ திருப்பயர் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் லீக் விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பிடம் பிடித்த மாணவர்களுடன் பள்ளி நிர்வாகத்தினர்.

விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.

மாலை நிகழ்ச்சியில் கவுரவ விருந்தினராக கலந்து கொண்ட ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக் குழுமங்களின் இயக்குநர் என். எஸ்.தினேஷ் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி பாராட்டினார். லீக் விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை 'ஸ்போட்டிஃபிட்ஸஜன்' என்ற விளையாட்டு அமைப்பினர் செய்திருந்தனர்.

GREATER CHENNAI CORPORATION
Special Projects Department

S.P.D.C.No.B1/1376/2023 **e-TENDER NOTICE**

e - Tender is invited for the following work in Two Cover System as per details furnished below.

S.P.D.C.No.B1/1376/2023:- Redevelopment of Thiruvottiyur High Road (from Tollgate Metro Station to New Washermanpet metro station) in Division-39, Zone-4) and Arunachaleswar Koil Street (from New Washermanpet Metro Station to QQ scheme road) in Division-39, 40 (Part), Zone-4 - Approximate **value of work - Rs.42,57,16,439/-** (Inclusive of GST) - Submission of **E.M.D. Rs.42,58,000/-** through online net banking transaction on e-tender portal only.

Tender document will be available in website: **https://tntenders.gov.in**
Pre-bid meeting date and Time : **03.04.2024** at **3.00 p.m.**
Tender last date and time of submission : **16.05.2024** upto **3.00 p.m.**
Tender opening date and time : **17.05.2024** at **3.00 p.m.**

DIPR / 1660 / Tender / 2024 **Superintending Engineer (Special Projects)**

தமிழ்நாடு அரசு - **பொதுப்பணித்துறை**
கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை–5
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.70 கட்டட(க&ப) வட்டம்/2023–2024/நாள்.15.03.2024
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை / இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க(ம)ப) வட்டம், சென்னை–5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்.	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்களின் தகுந்த வகுப்பு
1.	இரு உறை முறை சென்னை–28, பசுமைவழிச் சாலையில் அமைந்துள்ள NB 22 & 35–ல் சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதியரசர்கள் தங்குவதற்கான 10 எண்ணிக்கையிலான பங்களாக்கள் கட்டும் பணி மு.வை.தொகை – ரூ.16,86,000/–	ரூ.3351.10 இலட்சங்கள்	12 மாதங்கள்	வகுப்பு I-A

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 30.04.2024 மாலை 3.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.04.2024 மாலை 4.00 மணி

செ.ம.தொ.இ/1668/ஒப்பந்தப்புள்ளி/2024

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5

↑ கோட்டக்குப்பத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் பிரபா.கல்விமணி. உடன் ரவிக்குமார் எம்.பி.

படம்: எம்.சாம்ராஜ்.

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக விசிக ஆர்ப்பாட்டம்

● விழுப்புரம்

குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்திய மத்திய அரசைக் கண்டித்து, விழுப்புரம் மற்றும் கோட்டக்குப்பத்தில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோட்டக்குப்பம் நகராட்சி அலுவலகம் எதிரில் நேற்று காலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்டச் செயலாளர்கள் பொன்னிவளவன், மலைச்சாமி தலைமை வகித்தனர். விழுப்புரம் எம்.பி. துரை. ரவிக்குமார், பிரபா கல்விமணி ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து மாலையில் விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் பெரியார், விடுதலைச்செல்வன் தலைமை வகித்தனர். மாவட்டச் செயலாளர்கள் பொன்னிவளவன், திலீபன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். காட்டுமன்னார்கோவில் தொகுதி எம்எல்ஏ மா.சிந்தனைசெல்வன் சிறப்புரையாற்றினார்.

மண்ணாடிப்பட்டு தொகுதியில் தரமற்ற சாலை அமைப்பதாக குற்றச்சாட்டு

● புதுச்சேரி

புதுவை மண்ணாடிபட்டு குமாரபாளையம் கிராமத்தில், பொதுப்பணித்துறையின் மூலம் தார்ச்சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது. இந்தப் பணியை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்பார்வையிடவில்லை. இதனால் தார்ச்சாலை உயரத்தின் அளவு குறைத்து சிப்ஸ் மிக்சிங் மட்டும் போட்டு தரமற்ற சாலையை ஒப்பந்ததாரர் அமைத்து வருகிறார். இதேபோல குடிநீர் குழாய் அமைக்க பள்ளம் எடுத்த இடத்தில் முறைப்படி ஜல்லி கொட்டி சிப்ஸ் மிக்சிங் போட வேண்டும். ஆனால் இங்கே நேரடியாக சிப்ஸ் மட்டுமே போட்டு சாலை அமைக்கப்படுகிறது. மேலும் ஒப்பந்த பணி விவரம், திட்டத்தின் மதிப்பீடு, ஒப்பந்ததாரர், அதிகாரிகள் விவரம் அடங்கிய பதாகையும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கவில்லை. இதுகுறித்து முதல்வர், அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குமாரபாளையம் கிராமத்தை சேர்ந்த சமூகநல அமைப்பினர் வீடியோ வெளியிட்டு கோரியுள்ளனர்.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்). Extn. 4206/4295.
E-Mail: pmd.civil@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
232413 007922	TNPL அலகு-I'ன் குடியிருப்பு வளாகத்தில் புதிய Transit house கட்டடத்திற்கான (G+2 தளங்கள்) கட்டுமானப் பணிகள்.	05.04.2024

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள். ஒப்பந்தப்புள்ளிக் கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை **21.03.2024** முதல் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் **www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app** இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/1684/ஒப்பந்தப்புள்ளி/2024 நாட்டின் இயற்கைவளம் யோர்ற்றும் காக்கும் செய்வோம்

கோயம்புத்தூர் மாநகராட்சி
விருப்பக் கேற்பு அறிக்கை (RFP)
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.RFP-3/2024 நாள் : 15.03.2024

வ. எண்	பணியின் விபரம்	கலந்தாய்வு கூட்ட நாள்	ஒப்பந்தப் புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்
1	Proposal for appointment of Transaction Advisor for advising the project for setting up Treated Reuse Water Plant of 25 MLD Capacity with Distribution Pipes at Ukkadam STP for Reuse of Water for Industries in SIDCO Estate	28.03.2024 முற்பகல் 11.00 மணி (As per the Server Clock)	09.04.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock)	09.04.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock)

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். **www.tntenders.gov.in, ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1 தொலைபேசி எண். 0422 –2396026. Email : commr.coimbatore@tn.gov.in**

செ.ம.தொ.இ./1689/ஒப்பந்தப்புள்ளி/2024 **ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.**

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.28/36, 1வது தளம், தெற்கு மேற்கு போக் சாலை, தி நகர், சென்னை - 600017.

2002-ம் ஆண்டு SARFAESI சட்டத்தின் விதி 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்குறிப்பிட்ட கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களாகிய தாங்கள், தங்களுடைய அசையா சொத்துக்களை அடமானமாக வைத்து **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** மூலம் கடன் வசதியினை பெற்று உள்ளீர்கள். நீங்கள் அனைவரும் செலுத்தவேண்டிய தவணைகளை செலுத்த தவறியதால் அந்தக் கணக்குகள் **வாராக்கடன் சொத்துக்கள்** என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** கடன் அளித்தவர் கீழ்குறிப்பிட்ட சட்டத்தின்படி, சட்டம் பிரிவு 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் பிரிவு 13(2) விதி 2-ன்கீழ் **கோரிக்கை அறிவிப்பு** வழங்கப்பட்ட தேதியிலிருந்து **60 நாட்களுக்குள்** கீழ்குறிப்பிட்ட கடன் கணக்கிலுள்ள கடன் பாக்கி மற்றும் வட்டி உட்பட, பத்தி எண்.2-ல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களாகிய தங்கள் செலுத்த வேண்டுமெனை அறிவிக்கப்பட்டது, ஆனால் பல்வேறு காரணங்களால் அறிவிப்பினை தங்களுக்கு வழங்க முடியவில்லை.

வ. எண்.	கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் பெயர்	கடன் கணக்கு எண். & கடன் தொகை	அமுல்படுத்தப்பட்ட அடமான சொத்தின் விபரம்	NPA நாள் & கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவை தொகை ரூ./ தேதியின்படி
1	**1) Ms. New Mass Saloon,** எண்.12, பாவன்கோ தெரு, காரமணிகுப்பம், பாண்டிச்சேரி - 605004. **2) திரு. செந்தில்குமார், த/பெ. செல்வராஜ்,** எண்.12, ஏழாய் மாரியம்மன் கோவில் தெரு, வேப்பகீரபாளையம், பாண்டிச்சேரி - 605004. **3) திருமதி. அன்பல்சாகி, க/பெ. செல்வராஜ்,** எண்.12, ஏழாய் மாரியம்மன் கோவில் தெரு, வேப்பகீரபாளையம், பாண்டிச்சேரி - 605004.	**கடன் கணக்கு எண்.** 33909440000089 **கடன் தொகை: ரூ.5,00,000/-**	**சொத்தின் விவரம்:** புதுச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் புதுச்சேரி சார்-பதிவு மாவட்டம், கிராமம் எண்.40, புதுச்சேரி வருவாய் கிராமம், வேப்பகீரபாளையம், ஏழாய் மாரியம்மன் கோவில் தெரு, வார்டு- E, பிளாக் எண்.2, டி.எஸ்.எண். 78, ஆர்.எஸ். எண். 437/2pt, Cad No.52pt, பட்டா எண். 525, கிழக்கு-மேற்கு 17 அடி, 3 அங்குலம், தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் 23 அடி 9 அங்குலம், மேற்கு பக்கம் 25 அடி, 9 அங்குலம், மொத்த பரப்பு 427 சதுர அடி நிலம் மற்றும் ஆர்.சி.சி. கட்டிடம், மின்சார சர்வீஸ் மற்றும் தண்ணீர் இணைப்பு உட்பட மேலும் அட்டவணை C. **எல்லைகள்: கிழக்கு :** சந்திரா அவர்களின் பங்கு B-அட்டவணை, **மேற்கு :** பொது லேன், **தெற்கு :** தண்டபாணி என்கிற வீர்பன் அவர்களின் பங்கு Aஅட்டவணை, **வடக்கு :** ஏழாய் மாரியம்மன்கோவில் தெரு. அளவுகள் (சதுர அடி/சதுர யார்டு, இதர) மொத்த பரப்பு 427 சதுர அடி. இயற்கை மற்றும் சொத்தின் உபயோக அனுமதி **a)** ஃபீரி ஹோல்ட், **b)** குடியிருப்பு.	**NPA நாள் : 02.03.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 14.03.2024**	**மொத்த தொகை 11.03.2024** அன்றைய தேதியில் **ரூ. 3,69,357.40**
2	**1) திரு. AR கார்த்திகேயன் R, த/பெ. திரு. ரவி,** எண்.23, கம்பர் தெரு, செல்லபெருமாள்பேட், புதுச்சேரி - 605008. **2) திருமதி. விமலா P, க/பெ. திரு. AR கார்த்திகேயன் R,** எண்.23, கம்பர் தெரு, செல்லபெருமாள்பேட், புதுச்சேரி - 605008. **3) Ms. Top Rexin,** எண்.315, திருவள்ளுவர் சாலை, பிள்ளைதோட்டம், புதுச்சேரி - 605013.	**கடன் கணக்கு எண்.** 46009440000121 **கடன் தொகை: ரூ.10,50,000/-**	**சொத்தின் விவரம்:** திண்டிவனம் RD, வானூர் SRD, பழைய எண். 375/6, புதிய ச.எண். 391/1பி2பி, மனை எண்.4, பூதுறை சாலை, பூதுறை வருவாய் கிராமம், அளவுகள் கிழக்கு மேற்கு 20.6 அடி, தெற்கு வடக்கு மேற்கு பக்கம் 132 அடி. மொத்த பரப்பு 2737 சதுர அடி காலி நிலம் மனை, பட்டாவின்படி ஆர்.எஸ்.எண். 391/1பி2பி. **எல்லைகள்: தெற்கு :** பாதை, **வடக்கு :** புதிய சர்வே எண். 391/2, **கிழக்கு :** ஜெயகுமார் மனை எண்.3, **மேற்கு :** வெங்கடேசன் மனை எண்.5. அளவுகள் (சதுர அடி/சதுர யார்டு, இதர) 2737 சதுர அடி. இயற்கை மற்றும் சொத்தின் உபயோக அனுமதி **a)** ஃபீரி ஹோல்ட், **b)** குடியிருப்பு.	**NPA நாள் : 02.03.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 14.03.2024**	**மொத்த தொகை 11.03.2024** அன்றைய தேதியில் **ரூ. 7,78,552.91**

எனவே, கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரருக்கு வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ளபடி அந்தந்த கடன்தாரர்/இணை-கடன்தாரர் எதிராக வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ளபடி மொத்த தொகையை செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியான **60 நாட்களுக்குள்** வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் வட்டி மற்றும் பணம் செலுத்தும் தேதிவரை செலுத்தப்பட வேண்டிய பிற கட்டணங்களுடன் சேர்த்து அந்தந்த கடன் கணக்கில் செலுத்த வேண்டும், அவ்வாறு தவறும்பட்சத்தில் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** மேற்குறிப்பிட்டுள்ள வ.எண்.4 குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும். நிதி சட்டத்தின்கீழ் கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு எதிராக **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கு பாரபட்சமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)-ன்படி பாதுகாப்பை அப்பறப்படுத்தவோ அல்லது கையாளவோ அல்லது கடன் வழங்கியவரின் முன் அனுமதியின்றி அடமான செத்தினை குத்தகை அல்லது வேறு வழியின் மூலம் பரிமாற்றம் செய்யவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாள் : 16.03.2024 இடம் : புதுச்சேரி **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

↑ கோட்டக்குப்பத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் பிரபா.கல்விமணி. உடன் ரவிக்குமார் எம்.பி.

படம்: எம்.சாம்ராஜ்.

வரி விளம்பரங்கள்

கல்வி

பயிற்சி வகுப்புகள்

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346